CFM/2/34 (34)

# மது நமக்கு தேவையில்லாத மயக்கம்



# மது தேவைதானா?




**மதுவின் விளைவுகள்**

- இளைஞர்களின் வளமான வாழ்வைக் கெடுக்கிறது.
- உடனலத்துடன் இருப்பவரை நோயாளி கள் ஆக்குகிறது.
- பொறுப்புடன் வாழ்ந்தவரை பொறுப்பற்றவர் ஆக்குகிறது.
- குடும்பத்தில் பிரச்சினையை உண்டாக்கு கிறது.
- பிள்ளைகளின் கல்வியைப் பாதிக்கிறது.
- விபத்துக்களை ஏற்படுத்துகிறது.
- நல்லவர்களை தப்பான வழியில் திருப்பி விடுகிறது.

## குடிப்பதற்கான காரணங்கள்

மதுவை அருந்துவோர் அதனை நியாயப் படுத்துவதற்காக பல காரணங்களை கூறுகின்றனர். அவற்றுட் சில.....

- *நண்பர்களை சேர்க்க, நட்பு பிரியாமலிருக்க*
- *பிறரோடு நன்கு பேசிப் பழக*
- *உடல் களைப்பை நீக்க*
- *உற்சாகம் பெற*
- *சிறந்த சிந்தனைக்கு*
- *உள்ளத்தை உருக்கும் வேதனையை போக்க*
- *பிரச்சனைகளை எதிர்கொள்ள*

இது போன்ற பிழையான நம்பிக்கைகளால் மனிதன் மதுவிற்கு அடிமையாகிறான்.

## மது உடலில் ஏற்படுத்தும் தாக்கம்

மது மூளையின்செயற்பாடுகளை மந்தப் படுத்துகின்றது பிரதானமாக இதனை நாம் 3 படிநிலைகளில் கூறலாம்.

**1ம்படிநிலை :** செயற்கையான மகிழ்ச்சிநிலையும், நடத்தைப் பிறழ்வும்

இந்நிலையில் வேகம், தன்னடக்கம் தளரும். மனித உணர்வுகள் மந்தமடையும்.

**2ம்படிநிலை :** தொழிற்பாட்டு மந்தநிலை

இந்நிலையில் மதிப்பில்லாத செயற்பாடுகள்/ கதை, தள்ளாட்டம், சோம்பல் ஏற்படும்.

**3ம் படிநிலை :** ஆழ்ந்த நித்திரையைத் தொடர்ந்து மயக்கநிலை

இதில் சுவாச இரத்தச் சுற்றோட்ட மையங்கள் பாதிப்படையும்

**இதனால் மனிதன் பலவிதமான நோய்களுக்கு ஆளாகிறான்...**

சிமாட் பிறிண்டேர்ஸ், 717, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

# மது பற்றிய சில உண்மைகள்



மது அருந்துபவர்களின் முகம் ஒரு விதமான விகாரமடைந்து போகிறது. மது அருந்துபவரை முகத்தைப் பார்த்தே இனங் காணமுடியும்.



மது விளம்பரங்களில் வரும் நாயகர்கள் எவரும் தமது சொந்த வாழ்க்கையில் மது அருந்துவதில்லை. அவர்கள் வருவது பணத்திற்காக மட்டுமே.



மது அருந்துபவர்கள் தாங்கள் எடுக்கும் வாந்தியிலேயே உருண்டு புரண்டு அசிங்கப் படுவதை நாம் காண முடியும்.



மது அருந்துபவர்கள் வீண் சண்டைகளில் ஈடுபடுவதையும் மற்றவர்களை வன்சொற்களால் திட்டுவதையும் காணமுடியும்.

## மதுவினால் ஏற்படும் முக்கியமான சில நோய்கள்

*1. இரைப்பைப்புண்*

*2. 90 வீதமானவர்களில் ஈரலழற்சி ஈரல் வீக்கம் என்பன ஏற்படும். Åஇதனால் இரத்த வாந்தி எடுப்பார்கள்.*

*3. சதையி அழற்சி. Å இதனால் சலரோகம் ஏற்படும்*

*4. இருதய நோய்கள்*

*5. ஆண்களில் பாலியல் உணர்வைத் தூண்டுவது போலிருந்தாலும் உண்மையில் பாலியலுறுப்பை சோர்வடையச் செய்வதால் ஆண்மைக் குறையை ஏற்படுத்துகிறது.*

**இதனை விட இன்னும் பல நோய்களும் ஏற்படும்.**

# குடிநோயாளி என்பவர்.....

**தனது உடல்நலம் குடும்பநலம் சமூகநலன் பொருளாதாரம் என்பன பாதிக்கப்பட்டும் குடிப்பழக்கத்தை விடாது தொடர்ந்து மது அருந்துவார்.**

**மது பற்றி எப்போதும் விழிப்பாக இருங்கள்......**



***அது மனிதனை நோயாளியாக்கி மரணத்தை விரைவாக வரவழைக்கும்***

☆ மது போதைக்கு சிகிச்சை உண்டா?

ஆம்

ஆனால் தொடர்ந்து சிகிச்சை எடுப்பதன் மூலமே சிகிச்சையின் முழுப்பலனையும் பெறலாம்.

☆ எவ்வாறான சிகிச்சைகள்?

தொடர்ந்து மது பாவிக்காமலிருப்பதற்கான சிகிச்சை.

உடல் நோய்கள் ஏற்பட்டிருப்பின் அவற்றிற்கான சிகிச்சை.

அனுசரணை
லயன்ஸ் கழகம்
உரும்பிராய்

## ஆலோசனை நிலையங்கள்

- மனித முன்னேற்ற நடுநிலையம்
  (ஆலோசனையும் உதவியும் வழங்கல்)
- சாந்திகம்
- அகவொளி
- சுகவாழ்வு
  - உளவியல் பிரிவு, உள மருத்துவப்பிரிவு
  - யாழ் போதனா வைத்தியசாலை
  - தெல்லிப்பழை வைத்தியசாலை
  - மந்திகை வைத்தியசாலை

## சிறியதோர் இலாப நட்டக்கணக்கு

### *குடிப்பதால்......*

ஒருநாளைக்கு குறைந்தது 100 ரூபாவிற்கு குடித்தால் ஏற்படும் செலவு.....

ஒரு மாதத்திற்கு 3000 ரூபா (இப்பணத்தில் ஒரு றேடியோ வாங்கலாம்)

ஒரு வருடத்திற்கு 36000 ரூபா (ரீவி /3 சைக்கிள் வாங்கலாம்)

10 வருடத்திற்கு 360000 ரூபா (காணி வாங்கலாம்)

10 வருடங்கள் தொடர்ந்து குடிப்பதால் இதனுடன் மேலதிகமாக குடிப்பதால் ஏற்படும் நோய்க்கான மருத்துவச் செலவு, பொருட் செலவு என்பனவும் அடங்கும்.

### குடியை ஒழிப்பதால்....

- செலவு மிச்சம்
- இது பிற்கால மூலதனம்
- குடும்ப அங்கத்தவருடன் நேரத்தை மகிழ்ச்சியுடன் கழித்தல்
- வேலையில் பற்றும் உற்சாகமும் அதிகரித்தல்
- சொந்தமாகதொழில்தொடங்கும்வாய்ப்பு அதிகரித்தல்
- யாருக்கும் அடிமையாகாத நிலை
- வளமான ஆரோக்கியமான வாழ்வு

கல்வி சார் பொருட்கள் தயாரிப்பலகு
சமூதாய மருத்துவத்துறை
யாழ் பல்கலைக்கழகம்

2005